# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.81/2022

வாதி தரப்பு 2 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரம்யா வா.சா.–2 | | |
| க/பெ. | சங்கர்கணேஷ் | | |
| கிராமம் | சொக்கலிங்கபுரம் | தொழில் | |
| தாலுகா | அருப்புக்கோட்டை | வயது | 34 |

---

முதல் விசாரணை 01–12–2025.

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 2 வது சாட்சி என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை வாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) 04.03.2022 ம் தேதிய வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த தானப்பத்திரம் அசல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) ரிட் மனு எண்.4290/2023 ல் WP(MD)No.4061/2023 ல் ஏற்பட்ட Stay உத்தரவு இணையதள நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S